# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

புதன்கிழமை 06.11.2024 supeedsam.com supeedsam@gmail.com







# சசிகலா மீது தாக்குதல்

## உரசல் காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார்



தென்மராட்சி பாரளுமன்ற வேட்பாளர் சசிகலா இரவிராஜின் வாகனம் மீது கொலைவெறித்தாக்குதல் இன்று மாலை இடம்பெற்றுள்ளது .சிறிய உரசல் காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார் .

தேர்தல் பிரச்சாரத்திற்காக தனது வீட்டில் இருந்து புறப்படும் போது ..சாவகச்சேரி தமிழரசுக்கிளையின் குழு ஒன்றும் அதன் பெண் ஒருவர் தலைமையில் மீண்டும் தாக்குதல் நிகழ்தப்பட்டுள்ளது .

இத்தகைய தாக்குதல் முன்பும் இடம்பெற்றுள்ளது . இது தொடர்பாக சாவகச்சேரி

02 ஆம் பக்கத்தில்...









# என்னை கொலை செய்ய திட்டம்

## அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு சந்திரிக்கா எதிர்ப்பு

அரசியல் காரணங்களுக்காக தனது கணவர் விஜய குமாரதுங்க கொலை செய்யப்பட்டது போன்று தன்னையும் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குறைப்பது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ஹேமசிறி, கடந்த ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி

02 ஆம் பக்கத்தில்...










# திருமலையில் பிரபல தனியார் வைத்தியசாலையின் உரிமையாளரின் மனைவி வெட்டிகொலை




திருகோணமலையில் பிரபல தனியார் வைத்தியசாலையின் உரிமையாளரின் மனைவி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை தனியார் வைத்தியசாலை உரிமையாளரின் மனைவியான ஏஞ்சலி சுமேத்ரா (63வயது) எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

வெளிநாட்டில் இருந்து இன்று அதிகாலை வருகை தந்து வைத்தியசாலை கட்டிடத் தொகுதியில் உள்ள மூன்றாவது மாடியில் தனது அறையை திறப்பதற்காக சென்றபோது அறைக்குப் பக்கத்தில் இருந்த மைத்துனரால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கத்திக்குத்தை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலை உரிமையாளரின் சகோதரரான 56 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தலில் தோல்வி அடைந்தால் வீட்டில் இருந்து ஓய்வெடுங்கள்

## ரணிலுக்கு ஜே.வி.பி. இப்படி ஆலோசனை

உங்களை மக்கள் நிராகரித்துவிட்டார்கள், நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள். எனவே, வீட்டில் இருந்து ஓய்வெடுங்கள்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



அரசமைப்பை எப்படி மீறுவது என்பது பற்றிதான் ரணிலிடம் கற்றுக்கொள்ள வேண்டும். தேர்தல்களை ஒத்திவைத்த அவருக்கு ஜனநாயகம் பற்றி கதைப்பதற்கு உரிமை கிடையாது. எனவே, அரசமைப்பு மற்றும் ஜனநாயகம் பற்றி எமக்கு ரணிலின் ஆலோசனை தேவையில்லை.

தேர்தலில் தோல்வி அடைந்தால் வீட்டில் இருக்க வேண்டும். அதை விடுத்து மீண்டும் அரசியலுக்கு வந்து நகைச்சுவையாளராக மாற வேண்டாம். என்றார்.

## என்னை கொலை செய்ய திட்டம் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு சந்திரிக்கா எதிர்ப்பு

வழங்கிய கடிதத்தில், தனது பாதுகாப்புப் பிரிவினரின் எண்ணிக்கையை 50 இல் இருந்து 30 ஆக குறைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 243, 200 மற்றும் 109 பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், எந்த அளவுகோலின் அடிப்படையில் தனக்கு மாத்திரம் 30 பாதுகாவலர்களை வழங்க தீர்மானிக்கப்பட்டது என்பது தொடர்பில் குழப்பமடைந்துள்ளேன்.

ஓய்வுபெற்ற ஐந்து ஜனாதிபதிகளில் நான் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளானவர். கொலை முயற்சியில் காயமடைந்த ஒரே ஜனாதிபதி நான் மாத்திரமே.

தான் ஓய்வு பெற்றாலும் என்னை கொலை செய்வோம் என விடுதலைப் புலிகள் அமைப்பு 2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பகிரங்க அறிவிப்புகளை வெளியிட்டிருந்தது. இந்த விடயம் பொலிஸ் புலனாய்வு அறிக்கைகள் மூலம் தனக்கு தெரியப்படுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக 63 இராணுவ அதிகாரிகளும், 180 பொலிஸ் உத்தியோகத்தர்களும் என 243 பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளனர். மைத்திரிபால சிறிசேனவுக்கு 109 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உட்பட 200 பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளனர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் 175 இராணுவ அதிகாரிகளும், 25 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக்காக உள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின் போது தாம் ஆட்சிக்கு வந்தால் விசேட அதிதிகளுக்கு உயர் பாதுகாப்பு கிடைக்காது என ஜே.வி.பியின் தலைவர்கள் கூறினார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னரும் நூற்றுக்கணக்கான பாதுகாவலர்கள் உள்ளனர்.

அவ்வாறெனில் எமது நாட்டின் விசேட அதிதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கமும் ஏற்றுக் கொள்கின்றதா? என குறித்த கடிதத்தினூடாக சந்திரிக்கா பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

## சசிகலா மீது தாக்குதல்





பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் இல்லை.

குறித்த தொகுதி சட்டத்தரணி ஒருவரிடம் பொலிஸார் கையூட்டு பெற்றுக் கொண்டுள்ளார்களோ என எண்ணத்தோன்றுவதாக சசிகலா ரவிராஜின் ஆதரவாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இது தொடர்பாக தென்மராட்சி இலங்கை தமிழரசுக்கட்சி சாவகச்சேரி கிளைக்கு எதிராக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் தொடர்ந்து அபிவிருத்தியில் பின்னடைவே
# ஆயர் பிரதமரிடம் சுட்டிக்காட்டு





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டம் பல துறைகளிலும் அபிருவிருத்தியில் பின் தங்கிக் காணப்படுவதால் மன்னார் நோக்கியும் மிக கவனம் செலுத்தும்படி மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தன்னை சந்தித்த பிரதமரிடம் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நடைபெற இருக்கும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக தனது கட்சியான தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரைக்காக திங்கள் கிழமை (04) மன்னாருக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை மரியாதையின் நிமித்தம் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஒரு சில மணி நேரம் உரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது மன்னார் மறைமவாட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் , மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் . குடும்ப பொது நிலையினர் பணியக இயக்குனர் அருட்பணி இ.அகஸ்ரின் புஸ்பராஜ; அடிகளார் , முன்னாள் குருமுதல்வர் ஏ.விக்ரர் சோசை அடிகளார் மூத்த அருட்பணியாளர் எஸ்.எமிலியாணுஸ்பிள்ளை உட்பட ஆயர் இல்ல முக்கிய அருட்பணியாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆயர் அவர்கள் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்லுகையில் மன்னார் மறைமாவட்டத்துக்கு சொந்தமான மற்றும் பொது மக்களின் காணிகள் மற்றும் வயல் நிலங்களுக்கு உறுதிகள் இருக்கின்றபோதும் வன இலாக மற்றும் தொல்பொருள் திணைக்களங்கள் அடாத்தாக அபகரித்து வரப்படுவதையும் மன்னார் தீவில் கனியவள மணல் அகழ்வு மற்றும் காற்றாலை அமைப்பதனால் இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் எந்த அரசு ஆட்சிக்கு வருகின்றபோதும் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படாது இருப்பதாகவும் குறிப்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தியானது மந்த கதியிலேயே காணப்படுவதால் பிற மாவட்டங்களை நம்பியே இங்குள்ள நோயாளர்கள் காணப்படுவதாகவும் பிரதமருக்கு சுட்டிக்காட்டியதுடன்

இவ்வாறு மன்னார் மாவட்டத்தின் பல தேவைகளையும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியங்களையும் எடுத்துரைத்தார். ஆயர் மற்றும் அவரின் குழுக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சனைகளை கேட்டறிந்த பிரதமர் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

பிரதமர் ஆயர் இல்லம் வந்திருந்தபொழுது இதன் ஞாபகர்த்தமாக மருத மடு அன்னையின் திருச்சுரூபமும் பிரதமருக்கு ஆயரால் கையளிக்கப்பட்டது.

# சகோதர இனத்தின் நிர்வாகப் பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கின்றது





(பாறுக் ஷிஹான்)

யாழ் தலைமைகளின் அந்த நரித்தந்திரத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் எடுபிடிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்க நீங்கள் உறுதி எடுங்கள்.கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தலைமைகள் இங்கே நிராகரிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை மாற்றுத்தலைமையின் அவசியத்தை எம் மக்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். அதன் காரணமாகவே அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம் என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் 01ம் மற்றும் 09ம் இலக்கங்களில் வேட்பாளர்களாக போட்டியிடும் அற்புதலிங்கம் விஷ்கரன் மற்றும் செல்வநாயம் ரசிகரன் ஆகியோரை ஆதரித்து காரைதீவு கிராமிய குழு மற்றும் கிராம பொது அமைப்புகளால் திங்கட்கிழமை (04) மாலை ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.இதன்போது கல்முனை குட்டி ஜிம் இளைஞர்கள் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் வெற்றிக்கு கரம்கோர்த்து பணியாற்ற இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

இம்முறை பாராளுமன்றப் பொது தேர்தலில் எமது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிபோய்விடக்கூடாது என்பதனால் கடந்த காலங்களில் இங்கு போட்டியிடுவதிலிருந்து நாம் விலகியிருந்தோம்.

கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தலைமைகள் இங்கே நிராகரிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை மாற்றுத்தலைமையின் அவசியத்தை எம்மக்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். அதன் காரணமாகவே அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம். மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் நாம் ஆழ வேரூன்றி அகலக்கால் பதித்துள்ளோம். அங்கே நடந்துள்ள அபிவிருத்திப் பணிகளைப் போன்று அம்பாறை மக்களுக்காகவும் எதிர்காலத்தில் எம்மால் செய்ய முடியும்.

கடந்த தேர்தலில் தோல்வி கண்ட அந்த போலித் தமிழ் தேசியவாதிகள் அம்பாறை மக்களின் ஆணைக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்திருந்தால் அவர்கள் இந்தத் தேர்தலில் அம்பாறையில் போட்டியிடுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றுக்கு இரண்டாக வந்து இங்கே வீடென்றும் சங்கென்றும் பிரித்து நின்று அம்பாறை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் துணிந்துள்ளனர். நிச்சயம் அவர்கள் வெல்லப்போவதில்லை. கடந்த தேர்தல்ளில் ஒன்றாக நின்றபோதே அவர்கள் தோல்வி அடைந்தார்கள். ஆனால் தற்போது எப்படியாவது ஆயிரம் இரண்டாயிரம் என்று சேகரித்த அவ்வாக்குகளால் தங்களுக்கு ஒரு தேசிய பட்டியலை பெற்றுக்கொள்வதே அவர்களது தந்திரமான நோக்கமாகும். யாழ் தலைமைகளின் அந்த நரித்தந்திரத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.அவர்களின் எடுபிடிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்க நீங்கள் உறுதி எடுங்கள். ஆயுதப் போராட்டக்களத்தில் ஆகுதியானவர்களின் குடும்பங்களும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களும் அல்லலுறுவது தொடர்ந்த வண்ணமே உள்ளது. முன்னாள் போராளிகள் வாழ்வாதாரங்களின்றி கைவிடப்பட்டுள்ளனர். கல்முனை காரைதீவு திருக்கோவில் போன்ற பிரதேசங்களில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் நிர்வாக நெருக்கடிகளுக்கு உள்ளாகி அலைகின்றனர். கடலோர மீனவர்களுக்குரிய நவீன வசதிகள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. ஏழை மக்கள் சமூக பிரச்சினைகளுக்கு தள்ளப்பட்டுள்ளனர். மாற்றுத் திறனாளிகளின் எதிர்காலம் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சம்மாந்துறை நாவிதன்வெளி மற்றும் பொத்துவில் போன்ற பிரதேசங்களில் வாழும் எமது மக்கள் கவனிப்பாரற்றவர்களாக பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டிருக்கின்றார்கள். சகோதர இனத்தின் நிர்வாகப் பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கின்றது. வீரமுனைக் கிராமத்து மக்களுக்கு ஒரு வரவேற்பு கோபுரம் அமைக்கும் உரிமை கூட நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வந்துள்ளது. இத்தனைக்கும் வீரமுனைப் பிரதேசமானது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்புத் தமிழகத்துடன் கருக்கொண்ட வரலாற்றுப் புகழ் மிக்க இடமாகும். இறுதியாக எமது பிரசன்னமே அந்தப் பிரச்சினையை பகிரங்கப்படுத்தியது.

பல கிராமங்களில் தரமான பாடசாலைகள் இல்லை. மின்சார வசதிகள் இல்லை. தரமான வீதிகள் இல்லை. பல இடங்களில் வைத்தியசாலை வசதிகளில்லை. இருக்கும் வைத்தியசாலைகள் எவ்வித வசதிகளும் இன்றி கைவிடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. மாணவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகள் இல்லை. விளையாட்டு மைதானங்கள் இல்லை. இறந்து போகின்ற மனிதர்களுக்குரிய மயானங்கள் கூட உரிய வசதிகளின்றி காடுமண்டிக் கிடக்கின்றன. குறிப்பாக பொத்துவில் செங்காமம் கிராம மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பல அவலங்களோடு வாழ்கின்றனர். இக்கிராமத்தில் ஒரு பாடசாலைகூட இல்லாமல் அடிப்படைக் கல்வியைக் கூட தொடர முடியாத நிலையே காணப்படுகின்றது.

ஏன் சாகாமம் குடிநிலம் பகுதிகளைப் பாருங்கள் அங்கே உள்ள மீனவர்கள் வலைகள் கூட இன்றி வாடுகின்றனர். யானை வேலிகள் இல்லை. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இரவு நேரத்தினை கழிக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சுத்தமான குடிநீரின்றி மக்கள் அல்லலுறுகின்றனர். அக்கரைப்பற்று தமிழர்கள் அடிமைச்சந்தைகளைப்போல கூலி சந்தைகளை நம்பி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வு என்பது இழப்பதற்கு உழைப்பைத் தவிர எதுமில்லை என்னும் கையறு நிலையில் வந்து நிற்கின்றது.

இன்று கவனிப்பார் அற்றவர்களாக உறுதிமிக்க அரசியல் பிரதிநிதிகள் அற்றவர்களாக சுருங்கச் சொன்னால் அரசியல் குரலற்ற ஒரு அனாதை குழுவினராக சீரழிந்து கிடக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். இவையனைத்தையும் நாம் மாற்றியாக வேண்டும். அம்பாறை தமிழர்களுக்கு மட்டுமல்ல கிழக்குத் தமிழர்கள் அனைவருக்கும் எதிர்காலத்தில் ஒரு அரசியல் மற்றும் சமூக பாதுகாப்பு இயக்கமாக தலைமை கொடுக்க நாங்கள் முன்வந்துள்ளோம்.

ஆகவே எமது கரங்களைப் பலப்படுத்த முன்வாருங்கள். கிழக்கு மக்களின் குரலான தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் கீழ் ஒரணியாய் திரண்டு எமது பலத்தினை நிரூபிப்போம். 'கிழக்கு நமதே' என்று முழங்குவோம் என குறிப்பிட்டார் .

# தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நவம்பர் மாதம் 14 திகதி இடம் பெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது வழங்கல் மற்றும் பாரமெடுத்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (05) திகதி இடம் பெற்றது.

வழங்கல் மற்றும் பாரமெடுத்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடையங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக தெளிவூட்டப்பட்டது.





# இன்று சமூக சிற்பிகளின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களின் கருத்து களம்






**( வி.ரி.சகாதேவராஜா)**

சமூக சிற்பிகள் அமைப்பின் அம்பாறை மாவட்ட கட்சிகளது வேட்பாளர்களின் கருத்துக்களம் (5) செவ்வாய்க்கிழமை திருக்கோவில் விநாயகபுரத்தில் நடைபெற்றது .

சமூக சிற்பிகளின் தலைவி நடராஜா நிஷாந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அமைப்பின் சட்டத்தரணி திருமதி மனோகரன் சுதர்ஷினி நிகழ்வின் நோக்கம் பற்றி விளக்கினார்.

மக்களுடன் கலந்துரையாட அரசியல் கட்சிகள் சார்பில் எட்டு வேட்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தும் ஐந்து வேட்பாளர்களே மக்களுக்கு மதிப்பளித்து சமுகமளித்திருந்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளர் கி.ஜெயசிறில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் தவமணி சுப்பிரமணியம்,புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் வெ.ஜெயச்சந்திரன், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் எஸ்.நிரோஸன், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி வேட்பாளர் செ.இராசையா ஆகிய வேட்பாளர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

மக்கள் தங்கள் கேள்விகளை கேட்டனர்.

அதற்கு வேட்பாளர்கள் பதிலளித்தனர்.

இயற்கை வளங்கள் சூறையாடல் காணி சுவீகரிப்பு அரச காணி பகிர்ந்தளிப்பு காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் வெள்ளப்பெருக்கு முதலான ஏலவே ஒதுக்கப்பட்ட கேள்விகளை கேட்டனர்.

இலக்க அடிப்படையில் வேட்பாளர்கள் பதிலளித்தனர்.

தேர்தல் முடிந்த பின்னர் வெற்றியீட்டிய வேட்பாளரை அழைத்து இன்று வழங்கிய பதிலை நடைமுறைப் படுத்தல் தொடர்பாக வினவப்படும் என்று இணைப்பாளர் நிஷாந்தினி தெரிவித்தார்.

# அம்பாறையில் பிள்ளையான் உள்ளிட்ட கட்சி வேட்பாளர்கள் சூறாவளி பிரச்சாரம்






**(பாறுக் ஷிஹான்)**

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்புடன் பிரச்சார கூட்டம் திங்கட்கிழமை (04) இரவு நடைபெற்றது.

இதன் போது நாவிதன்வெளி வேப்பையடி 15 ஆம் கிராமம் பகுதியில் விக்னேஸ்வரன் ஆதரவணி தலைமையில் நாவிதன்வெளி கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு, நாவிதன்வெளி பிரதேச ஆலயங்களின் நிர்வாகிகள், விளையாட்டு கழகங்கள், கட்சியின் பிரதேச மற்றும் கிராமிய குழுக்களின் ஒருமித்த ஒழுங்குபடுத்தலில் ஆசிரியர் மு.விக்னேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் பிரதான பங்கேற்றிருந்ததுடன் வேட்பாளர்களான சோ.விபுலானந்ததாஸ், க.குலமணி, தே. சர்வானந்தன், மு.விக்கினேஸ்வரன், வெ.மோகன், செ.ரசிகரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

மேலும் விளையாட்டு கழக பிரதிநிதிகள், ஆலய பரிபாலன சபையினர் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதிகள் ஆதரவாளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் வெற்றிக்கு பலம் சேர்க்கும் வகையில் நாவிதன்வெளி சுதந்திரன், செந்தமிழ், உதயா விளையாட்டு கழகங்கள், ஸ்ரீமுருகன், மற்றும் பிள்ளையார் ஆலயன்களின் பரிபாலன சபை, மாதர் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், உள்ளிட்ட பொது அமைப்புகளும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் தேர்தல் வெற்றிக்காக ஒன்றிணைந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் வெற்றிக்கு பலம் சேர்க்கும் மக்கள் சந்திப்புக்கள் அன்றைய தினம் ஊறணி, பொத்துவில், திருக்கொவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, வீரமுனை, உள்ளிட்ட பகுதிகளிலும் சிறப்பாக நடைபெற்றிருந்தன.




சொய்சாபுர ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளரான ஜெய்சங்கர் மற்றும் லதாஞ்சிதா ஐயர் மற்றும் தேசியப்பட்டியல் உறுப்பினர் மற்றும் ஜீவா ஆகியோர் இணைந்து பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதை காணலாம்.



### தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படும் போது மௌனமாக இருந்தவர்கள்

# பாராளுமன்றத்தில் பேசி வட்டமடு மேய்ச்சல் தரையினை மீட்டுக்கொடுத்ததாக பேசுகின்றனர்





**(வி.சுகிர்தகுமார்)**

தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படும் போது மௌனமாக இருந்தவர்கள் பாராளுமன்றத்தில் பேசி வட்டமடு மேய்ச்சல் தரையினை மீட்டுக்கொடுத்ததாக இன்று பேசுகின்றனர் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளரான முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சோ.புஸ்பராசா தெரிவித்தார்.

ஜக்கிய தமிழத்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் காரியாலயாலத்தினை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நேற்று மாலை (04) திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜக்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவட்ட செயலாளர் க.வசந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வேட்பாளர்களான சோ.புஸ்பராசா, சுப்ரமணியம் தவமணி, ஆகியோரும் கிழக்கு தமிழர் ஒன்றிய செயலாளரும் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளரும் வா.குணாளன் ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர்கள் சங்க தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் , வம்மியடிகுள மீன்பிடிசங்கத்தலைவர் ஆ.பேரின்பராசா உறுப்பினர்கள் உட்பட பெருமளவான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

வருகை தந்த வேட்பாளர்களுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தனர்;. இதன் பின்னராக வேட்பாளர்களும் மக்களும் இணைந்து அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

இக் கூட்டத்தில் , ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ.புஸ்பராசா தொடர்ந்தும் உரையாற்றுகையில் வட்டைமடு மேய்ச்சல் தரையினை மீட்க போராடி வெற்றி கண்டது நான் அல்ல. ஆலையடி வேம்பு திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் பால் பண்ணையாளர் சங்கத்தின் உறுப்பினர்கள். அவர்களின் உதவியுடன் இத்தரையினை மீட்பதற்காக சட்ட ரீதியாக போராடினோம். பொலிசாரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். வழக்குத்தாக்கல் செய்தோம். அதில் வெற்றியும் கண்டோம்.

இதன் காரணமாக இன்று 30 ஆயிரம் கால் நடைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு நாள் வருமானமாக 4 இலட்சம் வரை அவர்கள் பெறுகின்றனர். இதனை எல்லாம் கண்டு கொள்ளாமல் பாராளுமன்றத்தில் பேசி வட்டமடு மேய்ச்சல் தரையினை மீட்டுக்கொடுத்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார் என்றார்.

# தமிழரசுக்கட்சி தலைவர்கள் அசைந்ததெல்லாம் ஊடகப்பேச்சாளர் சுமந்திரனின் கருத்திற்கே

**(வி.சுகிர்தகுமார் )**

அம்பாரை மாவட்ட தமிழரசுக்கட்சி தலைவர்கள் அசைந்ததெல்லாம் ஊடகப்பேச்சாளர் சுமந்திரனின் கருத்திற்கே என கிழக்கு தமிழர் ஒன்றிய செயலாளரும் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளருமான வா.குணாளன் தெரிவித்தார்.

ஜக்கிய தமிழத்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் காரியாலயாலத்தினை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நேற்று மாலை (04) திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.




ஜக்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவட்ட செயலாளர் க.வசந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வேட்பாளர்களான சோ.புஸ்பராசா, சுப்ரமணியம் தவமணி, ஆகியோரும் கிழக்கு தமிழர் ஒன்றிய செயலாளரும் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளரும் வா.குணாளன் ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர்கள் சங்க தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் , வம்மியடிகுள மீன்பிடிசங்கத்தலைவர் ஆ.பேரின்பராசா உறுப்பினர்கள் உட்பட பெருமளவான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

வருகை தந்த வேட்பாளர்களுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தனர்;. இதன் பின்னராக வேட்பாளர்களும் மக்களும் இணைந்து அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் சுமந்திரன் என்ன சைகை காட்டுகிறாறோ அதற்கு தலை அசைப்பவர்களே இங்கிருக்கும் தமிழரசுக்கட்சிய்ணீன் தலைவர்களும்; முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் என குற்றம் சுமத்தினார்.

இத்தேர்தலில் அம்பாரை மாவட்டத்தில் உள்ள கட்சிகளை ஒன்றிணைக்க பலர் பாடுபட்டனர். ஆனால் அது நடைபெறவில்லை. தமிழரசுகட்சி; சேர மறுத்துவிட்டனர். யாருடனும் இணைய மாட்டோம். தனித்தே நிற்போம் என்றனர். இது சமூகத்தின் மத்தியிலே தெளிவாக தெரியாது. தமிழரசுக்கட்சி சின்னத்தின் கீழ் நீங்கள் 10 வேட்பாளரும் நில்லுங்கள் என அழைத்தோம். அவர்கள் வரவில்லை என தவறான கருத்தொன்றை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர். அது வெறும் பொய்;.

இறுதிநேரம் வரை எங்களோடு இணைவதாக கூறிவிட்டு வெறுப்பாக இருந்தவர்கள். அதற்கு காரணம் அவர்களது சுயநலம். அம்பாரை மாவட்ட தமிழ் மக்கள் மீது அக்கறையின்மை.

ஆகவே அம்பாரை மாவட்ட மக்களின் தலைவிதியை தீர்மானிக்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகள் அன்றி மக்களே எனவும் குறிப்பிட்டார்.

# கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது

**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது .

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் நேற்று திங்கட்கிழமை மாலை இதனை வெளியிட்டு வைத்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024 ம்ஆண்டில்
நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் விருதுகள் வழங்குவதற்காக தெரிவு
செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் விபரம்.

அதன்படி தெரிவு செய்யப்பட்டுள்ளகலைஞர்களின் விபரம் வருமாறு..

**வித்தகர் விருது.**

1. ஜனாப். ஹயாத்து முஹமது ஹலால்தீன் (இலக்கியம்) - திருகோணமலை

2. திருமதி. பரமேஸ்வரி இளங்கோ (இலக்கியம்) - மட்டக்களப்பு

3. ஜனாப். உதுமாலெப்பை முகம்மது பௌஸ் (இலக்கியம்) - மட்டக்களப்பு

4. திரு. ஜெயக்கொடி டேவிட் (இலக்கியம்) - அம்பாறை

5. திரு. பிடபிள்யு. நந்தினி (இலக்கியம்) - அம்பாறை

6. திரு. பிடி. கருணாரட்ண (நாட்டாரியல்) - அம்பாறை

7. ஜனாப். உதுமாலெப்பை ஆதம்பாவா (நாட்டாரியல்) - அம்பாறை

8. திரு. பிடிஜி. பந்துல குமார (ஆற்றுகை) - அம்பாறை

9. ஜனாப். சுபைர் ரபீக் (ஊடகம்) - அம்பாறை

10. திருமதி. சுலோஜனா தேவராஜன் (ஆற்றுகை) - திருகோணமலை

11. திருமதி. இந்திராகாந்தி ராமலிங்கம் (ஆற்றுகை) - திருகோணமலை

12. திரு. தேவநாயகம் அலோசியஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு

13. கலாநிதி. முத்துராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா (பல்துறை) - மட்டக்களப்பு

14. திருமதி, அல்பேர்ட் சிவகாமிதேவி (பல்துறை) - அம்பாறை

15. ஜனாப். அச்சிமுஹமது தாஜீன் (பல்துறை) - அம்பாறை

**இளங்கலைஞர் விருது**

1. ஜனாப். நஸார் முகம்மது இஂஂஜாஸ் (இலக்கியம்) - திருகோணமலை

2. ஜனாபா. றுஸீட் பாத்திமா முஜாமலா (இலக்கியம்) - அம்பாறை

3. ஞூண். நதீகா போபிட்டிய (இலக்கியம்) - அம்பாறை

4. ஏ. நில்மினி சமரதுங்க (இலக்கியம்) - அம்பாறை



5. ஜனாபா. முஹம்மது ஹனிபா ஜிப்ரியா (நாட்டாரியல்) - மட்டக்களப்பு

6. திரு. தங்கவேல் சுமன் (நாட்டாரியல்) - மட்டக்களப்பு

7. ஜனாப். அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸ் (ஊடகம்) - அம்பாறை

8. திரு. வேதாரணியம் ஹோகுலரமணன் (நுண்கலை) - மட்டக்களப்பு

9. செல்வி. கேதாரிணி சிவாநந்தராஜா (ஆற்றுகை) - திருகோணமலை

10. திரு. ராஜேந்திரம் தனஞ்செயன் (ஆற்றுணடக) - மட்டக்களப்பு

11. திருமதி ஆர் சி.. தரங்கனி (ஆற்றுகை) -

**அம்பாறை**

12. திரு. கதிரேசன்பிள்ளை சந்திரமோகன் (ஆற்றுகை) - ஸமட்டக்களப்பு

13. திரு. ஆர் எஸ்.பள்ளேகெதர (ஆற்றுகை) - அம்பாறை

14. திரு. சண்முகம் பிள்ளை செல்வபிரகாஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு

15. செல்வி. சுந்தரலிங்கம் கிஷானி (ஆற்றுகை) - மட்டக்களப்பு

16. எச் எம். மாலனி ஹேரத் (ஆற்றுகை) - அம்பாறை

17. ஜனாப். ஜுனைட் முஹம்மது இஹ்சான் (பல்துறை) - திருகோணமலை

18. ஜனாப். முஹம்மது முஸ்தபா ஹிஜாஸ் அஹமட் (பல்துறை) - அம்பாறை

சிறந்த நூற் பரிசு (சாஹித்ய விருது)

1. புதுக்கவிதை - புழுதி - திரு. சிவானந்தராஜா கதன் (காரையன் கதன்) - அம்பாறை

2. புலமைத்துவ ஆய்வு - மட்டக்களப்பு மந்திர சடங்குகள் திரு. அருளானந்தம் சுதர்சன் - அம்பாறை

3. மரபுக்கவிதை நிலவைக் கேட்டுப்பார் - ஜனாப். முஹம்மது சொலிஹ் அப்துல் ஹை - மட்டக்களப்பு

4. நாவல் - ஆறாத வடு - திரு. முருகையா சதீஸ் - திருகோணமலை

5. வரலாறு - வரலாற்று சிறப்பு மிக்க அகஸ்தியர் ஸ்தாபனம் - திரு.தவராஜா தனுஷ்கர் -

**திருமலை**

6. சிறுகதை தைலாப் பெட்டி - ஜனாப். அலியார் பீர் முகம்மது - அம்பாறை

7. சிறுவர் இலக்கியம் - வண்டில் மாமா - ஜனாப். அ. மீரா முகைதீன் - திருகோணமலை

8. நாடகம் - கூத்து - வீதிநாடகங்கள் பனுவலும் ஆற்றுகையும் - திரு. சுந்தரலிங்கம் சந்திரகுமார் -

**மட்டக்களப்பு**

9. இலக்கிய சஞ்சிகை - அவரி - திருமதி. சித்தி மஷூனா சுஹறுதீன் - அம்பாறை

10. நாட்டார் இலக்கியம் - இளவேனிற் காலமும் கானங்களும் - ஜனாப் ஐ.ஏ.ஹஸன்ஜி - திருகோணமலை

11. அ. சமூக விஞ்ஞானம் (ஆயுள்சுவதம்) - நலன் தரும் மருத்துவம் - ஜனாப்.முஹம்மது இஸ்மாயில்

முஹம்மது பைஸல் - அம்பாறை ஆ.சமூக விஞ்ஞானம் (ஆன்மீகம்) - இந்துமத மரணக் கிரியைகளில் சவ அடக்கம் ஒரு
பார்வை - திரு. அருளம்பலம் குகராஜா - திருகோணமலை
இ. சமூக விஞ்ஞானம் (ஜோதிடம்) - மனையடி சாஸ்த்திரம் - திரு. கணபதிப் பிள்ளள விஸ்வலிங்கம் - மட்டக்களப்பு


## 06, வது விகிதாசாரத்தேர்தல்

# 2010

## மட்டக்களப்பு மாவட்டம்

✍பா.அரியநேத்திரன்.

# அறிந்தவை அறியாதவை: வரலாற்று பகிர்வு



2009,மே,18, ல் போர் மௌனித்த பின்னர் இடம்பெற்ற முதலாவது விகிதாசாரத் தேர்தல் எனவும் இதை பார்க்கலாம்..

போர் மௌனித்தாலும் அச்சத்திலும், இழப்புகளிலும் இருந்து மக்கள் விடுபடவில்லை.

'மழை விட்டாலும் துவானம் ஒயவில்லை' என்பது போல் தமிழ் ஆயுத ஒட்டுக்குவின் அட்டகாசம், அச்சுறுத்தலும் தேர்தல் காலத்தில் இல்லாமல் இல்லை..

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் வேட்பாளர் 2010, வேட்பாளர் பங்கீடு பற்றிய கலந்துரையாடல் சம்பந்தர் தலைமையில் கொழும்பு மாதிவெல பாராளுமன்ற உறுப்பின் செல்வம் அடைக்கலநாதனின் விடுதியில் இடம்பெற்றது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களே கலந்து கொண்டனர்.

2010, தெரிவின்போது யாழ்மாவட்டத்தில் இருந்து ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக செயல்பட்ட பத்மினி சிதம்பரநாதன், செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரையும் யாழில் வேட்பாளர்களாக நியமிக்க முடியாது என சம்பந்தர் தரப்பு கூறியதால் கஜேந்திரகுமார் பொன்னமரபலம் அவரக்ள் இருவருக்கும் சந்தர்ப்பம் தராவிட்டால் தாமும் வேட்பாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பில் வரமாட்டேன் என கூறினார். பின்னர் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சி சைக்கிள் சின்னத்துடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் அவர்கள் தனியாக யாழ் திருகோணமலை மாவட்டங்களில் போட்டியிட்டும் எந்த ஒரு ஆசனங்களையும் பெறவில்லை.

ஆனால் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சி உறுப்பினரான கஜேந்திரகுமாரின் மாமா சட்டத்தரணி வினாயகமுர்தி யாழ்ப்பாணத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டு தெரிவானார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஆயுதக்குழுவின் அட்டகாசம் தொடர்ந்தமையால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் செயல்பட்ட த.கனகசபை தாம் தேர்தலில் அச்சசூழலால் போட்டியிடமாட்டேன் என கூறி விலகினார்.

செல்வி க.தங்கேஷ்வரி 'ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளரானாராக கருணாவுடன் இணைந்தார்.

சே.ஜெயானந்தமூர்த்தி லண்டனில் குடும்பத்துடன் சென்ரார்.

பா.அரியநேத்திரன் மட்டுமே மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு மூலம் தேர்தலில் போட்டியிட்டார்.

மட்டக்களப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் வேட்பாளர்களாக போட்டியிட அப்பொது எவரும் விரும்பி முன்வராத நிலையில் மட்டக்களப்பில் இருந்து வேட்பாளர்களை தெரிவு செய்யும் சூழல் இருக்கவில்லை.

2010 தேர்தலில் வேட்பாளராக 'ஆம்'' என்றவர்கள் கூட இறுதியில் இல்லை என கூறி காலை வாரி விட்டனர்.

இந்நிலையில் கொழும்பில் வேட்பாளர்கள் தெரிவு பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. மறைந்த பொன்.செல்வராசா ,பா.அரியநேத்திரன் , ஊடகவியலாளர் இரா. உதயகுமார் ஆகிய மூவரும் கொழும்பு மாதிவெல பா.அரியநேத்திரனின் பாராளுமன்ற விடுதியில் சென்று மாவை அண்ணருடன் கதைத்து மட்டக்களப்பு வேட்பாளர் தொடர்பாக மட்டக்களப்பில் பலருடன் தொலைபேசியில் கதைக்கத்தோம்.

அதில் கல்குடா தொகுதியில் வேட்பாளராக கி.துரைராசிங்கத்தை நியமிக்கலாம் தாம் அவருடன் கதைத்ததாக மாவை அண்ணர் கூறினார் அவர் பூரண சம்மதம் ஆரம்பத்தில் தெரிவித்தார் பின்னர் செல்வராசா அண்ணரிடம் தன்னால் வேட்பாளராக வர குடும்பத்தார் அச்சத்தால் விரும்பவில்லை என கூறி அவரும் தாம் முடியாது கைவிட்டார். பின்னர் ஒரு நாள் கழித்து அவரே பொருத்தமான ஒருவர் உள்ளார் என சீனித்தம்பி யோகேஷ்வரனின் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் தந்தார்.

யோகேஷ்வரன் அப்போது இந்தியாவில் ஆலய தரிசனத்துக்காக சென்றுள்ளதாகவும் நாளை இலங்கைக்கு வந்து சந்திப்பதாகவும் கூறினார்.

பின்னர் அவரும் சம்மதித்த பின்னர் வேட்பாளர் நியமனப்பத்திரங்களை கொழும்பில் மாவை அண்ணரிடம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குரிய வேட்பு மனுக்களை பெற்றுக்கொண்டு மட்டக்களப்பில் வந்து மட்டக்களப்பில் நகர்பகுதியில் வேட்பாளர்களை ஒன்றாக அழைப்பதில் அச்சம் இருந்தமையால் அம்பிளாந்துறையில் பா.அரியநேத்திரனின் வீட்டில் வேட்பாளர்களை தனித்தனியாக வரவழைத்து கையொப்பம் பெறப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக்கட்சி 06 வேடர்பாளர்களும், டெலோ ஒருவேட்பாளரும் (01) ஈ.பி.ஆர்.எல்.எப் ஒரு வேட்பாளரும்(01) என கொழும்பில் கூடி முடிவானது.

இந்த சந்திப்பில் பிரசன்னா இந்திரகுமாரும் எம்முடன் கலந்துகொண்டார்.

இரு நாட்கள் கொழும்பில் தங்கியிருந்த மூவரும் அம்பாரை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ங்களுக்கான வேட்பு மனு படிவங்களுடன் மட்டக்களப்பு திரும்பினர்.

காலையில் மட்டக்களப்பு வந்தடைந்தடைந்தனர். பொன்.செல்வராஜா தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டி என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

வேட்பு மனு மட்டக்களப்பு கையளித்து அன்று நண்பகல் செல்வராசா அண்ணரின் மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதி வீட்டில் கைதுப்பாக்கியுடன் சென்ற ஆயுதபாணி யொருவர் அவரை கதவில் தட்டி கதைப்பது போல் பாசாங்கு செய்து சுடுவதற்கு கைதுப்பாக்கிய நீட்டியபோது அவர் சத்தம்போட்டார். உடனே அந்த ஒட்டுக்குழு உறுப்பினர் ஓடிவிட்டான் தெய்வாதீனமாக செல்வராசா அண்ணர் உயிர்தப்பினார்.

இந்த சம்பவத்தை உடனடியாக செல்வராசா அண்ணர் பா.அரியநேத்திரனிடம் தொலைபேசியில் கூறினார்.

அரியநேத்திரன் இதனை பகிரங்கபடுத்தினால் ஏனைய வேட்பாளர்களும் பயப்படுவார்கள். அதைவிட எவரும்

பிரச்சாரம் செய்ய எம்முடன் வரமாட்டார்கள் ஊடகங்களிலும் இதனை பகிரங்கப்படுத்தவேண்டாம் என ஆலோசனை கூறியதும் அதனை செல்வராசா அண்ணர் ஏற்றுக்கொண்டு வெளியில் எவரிடமும் கூறவில்லை. மாவை அண்ணருக்கு மட்டுமே கூறினார். தேர்தல் பிரச்சாரத்திற்கு வாகனம் அப்போது வாடகைக்கு கூட தரபலர் முன்வரவில்லை. பிரசுரங்களை அச்சிட அச்சங்கள் மறுத்தன.

இப்படியான பல சிக்கல் நிலையில் அந்த

தேர்தல் பிரசாரங்கள் முடியும் வரை பல உண்மைகள் மறைக்கப்பட்டது.

ஆனால் குறைந்த ஆட்பலத்துடன் கையாண்ட இப்படியான யுக்தி தான் அச்சுறுத்தல்கள், மிரட்டல்களை தாண்டி மட்டக்களப்பு தமிழ்மக்கள் மூன்று(3)ஆசனங்களை தக்க வைக்க முடிந்தது.

அந்த தேர்தலில் குறிப்பாக அரியநேத்திரனும், செல்வராசா அண்ணரும் பயந்து ஒதுங்கியிருந்தால் இலங்கை தமிழரசு கட்சி மட்டக்களப்பில் முகவரி அற்று போய் இருக்கும். தமிழ்தேசிய அரசியல் மறைக்கப்பட்டு ஆழும் தரப்பு அரசியல் மேலோங்கி இருக்கும், 2015, தேர்தலில் ஆதரவை பெறுவது சிரமம் ஏற்பட்டிருக்கும்( இன்னும் பல உண்மைகள் சில காரணங்களால் தவிர்த்துள்ளேன்)

**2010, பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் போட்டியிட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள்:**

**01.பொன்.செல்வராசா(தமிழரசு)-கல்லாறு**
**02.பா.அரியநேத்திரன்(தமிழரசு)-அம்பிளாந்துறை.**
**03.சீ.யோகேஸ்வரன் (தமிழரசு)-வாழைசரசேனை.**
**04.பிரசன்னா இந்திரகுமார் (டெலோ)-மட்டக்களப்பு.**
**05.கு.சௌந்தராஜன் (தமிழரசு)-மட்டக்களப்பு.**
**06.சு.சத்தியநாதன் (தமிழரசு)-கதிரவெளி**
**07.க.ஆறுமுகம்(ஈ.பி.ஆரா.எல்.எப்)-கன்னன்குடா.**
**08.த.சிவநாதன் (தமிழரசு)-தேற்றாத்தீவு.**

தேர்தல் முடிவுகள் :
மொத்தவாக்குகள்: 3,33,644
வாக்களித்தோர் :1,95,367
வீதம் : 59%
நிராகரிக்கப்பட்ட வாக்குகள்:14,749

கட்சிகள் பெற்ற வாக்குகள்:
த. தே.கூ : 66,235 வாக்குகள் ஆசனம் 03
ஐ.ம.சு.மு: 62,009 வாக்குகள் ஆசனம் 01
ஐ.தே.க : 23,935 வாக்குகள் ஆசனம் 01

ஆசனம் பெறாத கட்சிகள்:
த.ம.வி.பு :16,886 வாக்குகள்
த.வி.கூ. : 4,424
ஈரோஸ் 1,066
புளொட் 136 வாக்குகளையும் இந்த தேர்தலில் பெற்றிருந்தன.

17 கட்சிகளும் 28 சுயேட்சைகளும் களத்தில் நின்றன.

தெரிவானோர்:
த.தே.கூ
01.சீ.யோகேஸ்வரன் -20,569 வாக்குகள்
02.பொன்.செல்வராசா-18,485 வாக்குகள்
03.பா.அரியநேத்திரன் -16,504 வாக்குகள்
04.ஐ.ம.சு.முன்னனி ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் 22,256 வாக்குகள்
05.ஐ.தே.கட்சி பஷீர் சேகு தாவூத் -15432, வ ('ரீ.மு.கா,ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது)

2004ல் தெரிவான அமீர் அலி இந்த தேர்தலில் தெரிவாகவில்லை.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் (கூஹுஙக)

அரசியல் கட்சியாக பதிவு செய்த பின்பு 2010, அதன் முதலாவது நாடாளுமன்ற தேர்தலை சந்தித்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் பங்காளி கட்சியாக அவ்வேளை இருந்தாலும் 2010 தேர்தலில் தனித்து போட்டியிட்ட மகிந்தராசபக்ஷ அனுமதித்திருந்தார்.

2010, ல் பல உயிர் அச்சுறுத்தல், நெருக்கடிகள், இன்னல்களை சந்தித்தபோதும் மட்டக்களப்பில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை தமிழ் அரசுக்கட்சியில் இருந்து தெரிவானார்கள் மட்டக்களப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு 66,235, வாக்குகள் கிடைத்தது.

அடுத்த பதிவில் 06, வது விகிதாசாரத்தேர்தல் 2015, பற்றி பார்க்கலாம்.

**பா.அரியநேத்திரன்-**
**05/11/2024**
**(அரியம் ஆய்வகம்)**

